<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 14.11.2025

அசல் வழக்கு எண். 70/2024

வா.சா. 1– சுகுமார், த/பெ. ராஜி முதலியார்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை**</u>

வழக்கு எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் எங்களுடைய நிலத்தை பக்கத்து நிலத்துக்காரர் அவர்களுடைய நிலம் என்று அபகரிக்க முயற்சி செய்கிறார் ஆகவே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 138/2 ஆகும். அதனை என்னுடைய பாட்டி வள்ளியம்மாள் வாங்கினார். கடந்த 1942 ஆம் ஆண்டு வாங்கினார். வழக்கில் பட்டியல் ஏ சொத்து யாருடையது என்றால் எனக்கும், என் அண்ணன் கஜேந்திரன் என்பவருக்கும் சொந்தமானது ஆகும். அதனுடைய சர்வே எண் தெரியுமா என்றால் 790 ஆகும். அந்தப் பட்டா நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்தீர்களா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அது மட்டுமல்லாமல் வேறு ஒரு பட்டாவும் வாங்கி உள்ளோம் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பட்டியல் பி சொத்து ஏ சொத்தில் ஒரு அடக்கமான சொத்து என்றால் சேர்ந்ததுதான் ஆகும். பட்டியல் பி சொத்துக்கான பட்டா யார் பெயரில் இருக்கிறது என்றால் என் அண்ணன் பெயரிலும், என் பெயரிலும் அதாவது கஜேந்திரன், சுகுமார் பெயரில் இருக்கிறது. அந்தப் பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருக்கிறீர்களா என்றால் செய்துள்ளேன் பட்டா எண் 790 ஆகும். பி பட்டியல் சொத்துக்கான பட்டா திருநாவுக்கரசு பெயரில் தாக்கல் ஆகி உள்ளது என்றால் சரி இல்லை. மேற்படி பட்டா தவறானது என்று சார்பதிவாளர் அலுவலகத்தில் தெற்கு

மண்டலத்தில் கடந்த 1973 ஆம் ஆண்டு மனு கொடுத்துள்ளோம். திருநாவுக்கரசு வாங்கியது 1972 ஆகும். பட்டா எண் 471 திருநாவுக்கரசு பெயரில் இருப்பதை நீங்கள் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். அதனுடைய சர்வே எண் 625/3 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த ஆவணம் எஃப்.எம்.பி ஆவணம் நீங்களே தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணம் என்று சொன்னால் சரியில்லை. நீங்கள் மின்வாரிய கட்டணம் ரசீது தாக்கல் செய்து குறியீடு செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான் அந்த ஆவணம் 11 ஆவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து காலியாக இருக்கிறதா என்றால் செடி மரங்களை வைத்து நாங்கள் பராமரித்து வருகிறோம். அதில் மின் கட்டணம் எவ்வாறு செலுத்துகிறீர்கள் என்றால் அதற்கான பில் கிடையாது. காலி இடத்திற்கு வரி செலுத்துகிறீர்களா என்றால்  சரியாக தெரியாது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram